1979 நவம்பர் 7]

கோட்டூரில் புதிய மருத்துவமனை.

*வினா எண். 136—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் கோட்டூர் வட்டாரத்தின் தலைமையிடமான கோட்டூரில் மருத்துவமனை ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): கோட்டூரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் ஆதிச்சபுர கிராமத்தில் இரு மருத்துவ அலுவலர்களைக் கொண்டு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இது தவிர, கோட்டூரைச் சுற்றி முறைப்படுத்தப்பட்ட சித்த மருந்தகங்களும், அரசு மான்யம் பெறும் ஊராக மருந்தகங்களும் இயங்கி வருகின்றன. எனவே அரசு விதிமுறைப்படி கோட்டூரில் புதிய மருத்துவமனை ஏற்படுத்த வாய்ப்பில்லை. எனினும், ஊராட்சி ஒன்றியமும், பொதுமக்களும் நன்கொடை அளிக்கவும், நிலம், தகுந்த கட்டிடம் அளிக்கவும் முன்வந்தால் புதிய மருந்தகம் திறப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

திரு. பொ. உத்திராபதி: ஆதிச்சபுரத்தில் ஒரு மருத்துவ மனை இருப்பது உண்மைதான். இருந்தாலும், கோட்டூர் பகுதி ஏழை எளிய மக்கள், ஹரிஜன மக்கள் அதிகமாக வாழக்கூடிய ஒரு பகுதி. செயலர் அவர்கள் சொல்கிற அளவிற்கு இடமும், மக்களுடைய பங்குத் தொகையும் தர நாங்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கிறோம். செயலர் அவர்கள் வாக்குறுதிப்படி அங்கே ஒரு மருத்துவ மனையைத் துரிதமாக ஏற்படுத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தண்டையார்பேட்டை தொத்துநோய் மருத்துவமனை.

*வினா எண் 137—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டையார்பேட்டையில் உள்ள தொத்து நோய் மருத்துவ விடுதியை வேறு இடத்திற்கு மாற்றி விரிவு படுத்தும் திட்டம் சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படவிருக்கிறதா ?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): இல்லை.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, தண்டையார் பேட்டையிலுள்ள தொத்துநோய் மருத்துவமனையில் கட்டிட வசதியில்லை என்பதை அரசு அறியுமா? தொத்துநோய் சென்னையில் எங்கு பாதிக்கப்பட்டிருந்தாலும் அந்த மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக சில நேரங்களில் குடிசைகளைப் போட்டு அதில் வைத்து சிகிச்சை அளித்து வருவது அரசுக்குத் தெரியுமா? இந்த நிலைமையைப் போக்குவதற்கு ஒரு பெரிய இடத்தைப் பார்த்து, இந்த மருத்துவ மனையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தண்டையார்ப்பேட்டையிலுள்ள தொற்று நோய் மருத்துவமனையை சென்னை மாநகராட்சி நடத்தி வருகிறது. அம்மை, பெரியம்மை, காலரா, அம்மைக் கட்டு போன்ற பலதரப்பட்ட தொற்று நோயாளிகளுக்கு இம்மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. சென்னை நகரிலுள்ள மக்களுக்கு மட்டுமின்றி, சுற்றுப் புறத்தில் வாழும் கிராம மக்களுக்கும் இம் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தேசீய பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதால், கடந்த சில வருடங்களாக சென்னை நகரில் பெரியம்மை நோய் பரவவில்லை. இம்மருத்துவ மனையில் பெரியம்மை ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் செயல்படுகிறது. மேலும் சென்னை நகரிலுள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமின்றி மற்ற மாவட்டங்களிலுள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் தொற்று நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை அளிக்கும் முறை பற்றி போதிக்கும் நிலையமாகவும், இம் மருத்துவ மனை செயல்படுகிறது.

திரு. சு. பாலன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னையில் இப்படிப்பட்ட தொத்து நோய் மருத்துவ மனை வட சென்னையில் மட்டும் தான் இருந்து வருகிறது. இதில்தான் எல்லோரும் சிகிச்சை பெற்றுக்கொள்ள

1979 நவம்பர் 7]

வேண்டியிருக்கிறது. ஆகவே இதை மாற்றுகின்ற வகையில், தென் சென்னையில் ஒரு தொத்து நோய் மருத்துவ மனையை ஏற்படுத்த முடியுமா என்பதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா ?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தண்டையார்பேட்டையில் இருந்துவரும் தொத்து நோய் மருத்துவமனை நல்ல முறையில் செயல்பட்டு வருவதால் தற்போது புதிய தொத்து நோய் மருத்துவமனை ஏற்படுத்தும் குறிப்பு எதுவும் இப்போது இல்லை.

திரு. மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு காலரா, பெரியம்மை முதலிய நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது உண்மைதான். ஆனால் அங்கு நோயாளிகளுக்கு போதுமான பாதுகாப்பு இல்லை. கட்டிட வசதி போதுமானதாக இல்லை. நோயாளிகளைப் போய்ப் பார்க்கின்றவர்களுக்குக் கூட தொத்து நோய் ஒட்டிவிடுகின்றது. இந்தச் சூழ்நிலையில் அங்கு நோயாளிகளுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே ஏழை எளிய மக்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிப்பதற்காக அரசே முழு மான்யம் கொடுத்து நேரடியாக இதற்கான விரிவு பணிகளைச் செய்வதற்கு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசிலிக்கும்.

திரு. தீ. சு. நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையில் நிறைய நோயாளிகள் வந்து கொண்டிருப்பதால், விரிவடைந்து வருகின்ற சென்னை நகரத்தில் தென் சென்னையில் இதுபோன்ற ஒரு மருத்துவமனையை அமைக்கலாம் என்று முன்னால் முடிவு எடுக்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அதற்கு இடம் கொடுப்பதற்கு, கொடைவள்ளல் அழகப்ப செட்டியார் அவர்கள் பல ஏக்கர் நிலங்களை மாநகராட்சிக்கு அளித்திருக்கிறார். அது இப்போது எந்தவிதமான பயனும் இல்லாமல் அப்படியே இருக்கிறது. ஆகவே இப்போது உள்ள நிலைமையைக் கருதி, அந்த இடத்தில் புதிய மருத்துவ மனை ஒன்றை அமைப்பதற்கு அரசு முன் வருமா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): இதுபற்றி தனியாகக் கேள்வி போடவும்.

மருத்துவ மனைகளில் அக்குபங்சர் அறுவை முறை.

*** வினா எண். 138**—**திரு. ரா. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'அக்குபங்சர்' ஆபரேஷன் முறை தமிழ்நாட்டில் நடத்தப்படு கிறதா?

(ஆ) அத் துறையில் மேற்படிப்புக்கென வெளிநாடு அனுப்பும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) தற்போது, சென்னை மருத்துவ மனையில் நரம்பு இயல்துறை பகுதியில் கையாளப்படுகிறது.

(ஆ) இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, அக்குபங்சர் ஆப்பரேஷன் முறை, சில நோய்களுக்கு, குறிப்பாக கல்லீரல், நுரையீரல், மூத்திர நோய்—கிட்னி சம்பந்தமான நோய், இருதய நோய் இவைகளுக்கு ட்ரக் மூலம் சிகிச்சை அளிப்பதில் பாதுகாப்பு அற்ற நிலைதான் இருந்து கொண்டிருக் கிறது. ஆகவே இந்த முறையை சில நாடுகளில் கையாளுகிறார்கள். குறிப்